# மஸ்கெலியா பிரதேச சபையின் 2022.03.14 சபையமர்வு அறிக்கை

2022.03.14ஆம் திகதி காலை 09.30 மணியளவில் கௌரவ தவிசாளர் G.செண்பகவள்ளி அவர்களின் தலைமையில் சபையமர்வு ஆரம்பமானது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இன்றைய சபையமர்விற்கு வருகை தந்துள்ள அனைவரையும் அன்புடன் வரவேற்பதோடு கடவுள் வணக்கத்துடன் இன்றைய சபையமர்வானது ஆரம்பமாகும். அடுத்ததாக கடந்த மாத சபையமர்வு அறிக்கையினை சபை அனுமதிக்காக முன்வைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கடந்த சபையமர்வின் கௌரவ உபதவிசாளர் அவர்களின் கடிதம் தொடர்பாக பேசும் போது நான் கூறிய விடயமொன்று இணைக்கப்படவில்லை. அத்துடன் Home Shop தொடர்பாக கேள்வி எழுப்பியிருந்தேன், அதற்கு தவிசாளர் அவர்கள் அரசியல் என்றால் அப்படி தான் என்று ஒரு வார்த்தையினை தவிசாளர் அவர்கள் கூறியிருந்தீர்கள் அவ்விடயம் அறிக்கையில் வரவில்லை.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

Home Shop தொடர்பாக தாங்கள் எதுவுமே கூறவில்லை, சமுர்த்தி வங்கி முகாமையாளர் தொடர்பாக தான் பேசினீர்கள், அதுவும் ஒலி நடாவில் உள்ளது.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

Home Shop தொடர்பான பெயர்பட்டியல் தொடர்பான கூறும் போது அரசியல் என்றால் அப்படி தான் நாங்கள் இருக்கும் போது அப்படிதான் நீங்கள் இருக்கும் போது அப்படிதான் என்றவொரு விடயத்தை குறிப்பிட்டிருந்தீர்கள், அவ்விடயம் அறிக்கையில் இல்லை ஒலிப்பதிவை கேட்டுப்பார்த்தால் தெரியும்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

2022.02.11 சபையமர்வின் போது கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள், S.சுரேஸ்குமார் அவர்களும், கொண்டு வந்த பிரதேச செயலகம் தொடர்பான பிரேரணைகளுக்கான தீர்மானத்திற்கமைவாக உரிய இடங்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதா? அப்படியானால் எனக்கு கடித பிரதியினை பெற்றுத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

ஆம், கடிதம் அனுப்பப்பட்டுள்ளது, கடித பிரதியினை தாங்களுக்கு பெற்றுத் தருகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் T.வசந்தகுமார் அவர்கள் (இ.தொ.கா)**

கடந்த கால சபையமர்வு அறிக்கை சரியென நான் முன்மொழிகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

அதனை நான் வழிமொழிகின்றேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக இன்று எனது விசேட உரையிலே 02 முக்கியமான விடயங்களை கூறவுள்ளேன். அதிலே முதலாவது விடயமாக, நல்லதண்ணி மகரதோரன கழிவு நீர் சுத்திகரிப்பு மத்திய நிலையம் மற்றும் மலசலக்கூட தொகுதி தொடர்பானதாகும். இம்மலசலக்கூடத்தொகுதி மஸ்கெலியா பிரதேச சபையின் அதிகாரத்தின் கீழ் சிவனொளிபாதமலைக்கு வருகை தரும் யாத்திரிகளின் பயன்பாட்டுக்காக நீண்ட காலமாக வழங்கப்பட்டிருந்தது. எனினும் அம்மலசலக்கூட தொகுதியின் கொள்ளளவு மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் என்பன அங்கு வருகை தரும் யாத்திரிகர்களின் எண்ணிக்கைக்கு போதிய அளவில்

காணப்படவில்லை. இதனால் அங்கு வருகை தரும் மக்களிடமிருந்தும், பொது சுகாதார பரிசோதகர்களிடம் இருந்தும் அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்த வண்ணமே காணப்பட்டது. இப்பிரச்சினைகளை சபை நிதியினூடாக சரி செய்ய கூடிய வாய்ப்பும் நிதி நிலைமையும் காணப்படவில்லை. எனவே நான் உடனடியாக இவ்விடயத்தை கௌரவ இராஜாங்க அமைச்சர் ஜுவன் தொண்டமான் அவர்களுக்கும் மற்றும் நுவரெலியா மாவட்ட கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் இராமேஸ்வரன் அவர்களுக்கும் இவ்விடயத்தினை கொண்டு சென்றேன். இவ்விடயத்தின் அவசிய தன்மையை கருத்திற்கொண்டு கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ராமேஸ்வரன் மற்றும் கௌரவ இராஜாங்க அமைச்சர் ஜுவன் தொண்டமான் அவர்களினூடாக நுவரெலியா மாவட்ட செயலாளர்களுக்கு கொண்டு செல்லப்பட்டது. அதற்கமைவாக மாவட்ட செயலாளரின் வேண்டுகோளிற்கிணங்க நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டு அமைச்சினூடாக மூன்று கோடியே தொன்னூறு இலச்சம் ரூபா செலவில் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு தற்போது முழுமையாக இவ்வேலைத்திட்டம் செய்து முடிக்கப்பட்டு கடந்த வாரங்களில் மக்கள் பயன்பாட்டிற்காக என்னால் அம்மலசலக்கூட தொகுதி கையளிக்கப்பட்டது. எனவே இவ்வேலைத்திட்டத்தை மேற்கொள்ள உறுதுணையாக இருந்த கௌரவ இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் அவர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் இராமேஸ்வரன் அவர்களுக்கும், முன்னால் மாவட்ட செயலாளர் மற்றும் தற்போதுள்ள மாவட்ட செயலாளர் அவர்களுக்கும், நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டு அமைச்சிற்கும், பிரதேச செயலாளர் அவர்களுக்கும், விசேட அதிரடிபடையினர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் இது வரை காலமாக சிவனொளிபாதமலை பருவக்காலத்தில் மக்களுக்கு பாரிய பிரச்சினையாக இருந்த இவ்விடயத்தினை என்னால் நிவர்த்தி செய்து கொடுக்க முடிந்ததனை எண்ணி பெருமிதம் அடைகின்றேன். இரண்டாது விடயமாக 2022ம் ஆண்டு பாதீட்டில் மகளீர் மேம்பாட்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் 2022ம் ஆண்டு சர்வதேச மகளீர் தினத்தை முன்னிட்டு மஸ்கெலியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட கர்பிணி பெண்களுக்கான பொருட்களை 2022.03.09ம் திகதி மஸ்கெலியா வைத்தியசாலையில் வைத்து வழங்கி வைத்திருந்தேன்.இதற்காக 2022ம் ஆண்டு பாதீட்டறிக்கைக்கும் 2022ம் ஆண்டு வரி அறவீடுகனை செய்யும் ஆதரவாக வாக்களித்த அனைத்து கௌரவ உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர் குழாத்திற்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்ததாக சபைக்கு கிடைக்கப்பெற்ற கடிதங்கள் மற்றும் முறைப்பாடுகளை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கடித இல 01**

**அனுப்புனர்** - உள்ளுராட்சி திணைக்களம் - மத்தியமாகாணம்.

**விடயம்** - பொலித்தீன் மற்று லன்சீட் பாவனையை நிறுத்துதல் தொடர்பான கடிதம்.

**கடித இல 02**

**அனுப்புனர்** - உள்ளுராட்சி துணை ஆணையாளர் காரியாலயம்.

**விடயம்** - மிட்லோதியன் தோட்ட பாதை கொங்கீறீட் இடல் வேலைத்திட்டம் தொடர்பாக கடிதம்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

இக்கடிதம் தொடர்பாக எனது கருத்துக்கள் சிலவற்றை கூறலாமென நினைக்கின்றேன். தற்போது நாட்டின் நிலைமைபடி சீமெந்து போன்ற பொருட்களின் விலைகள் அதிகரித்த வண்ணமே உள்ளது. எதிர்வரும் காலங்களில் இவ்வேலைத்திட்டங்களை செய்ய போனால் எவ்வளவு செலவாகுமென தெரியவில்லை. தற்போது வெற்றி பெற்ற உறுப்பினர்களுக்கு நிதி அமைச்சர் வழங்கியுள்ள வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதில் இவ்வாறான பிரச்சினைகள் உள்ளது. விலையேற்றம் காரணமாக ஒப்பந்தகாரர்கள் பயப்படுகின்றனர். இதற்கு என்ன செய்வது? இக்கடித்திற்கு அமைவாக கால அவகாசம் வழங்குங்கள். இதே பிரச்சினை தான் ஏனைய விடயங்களிலும் உள்ளது. இக்கடிதத்துடன் சேர்த்து இவ்விடயங்கள் தொடர்பாகவும் குறிப்பிடவும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இவ்வேலைத்திட்டம் மாகாண சபை நிதி ஒதுக்கீட்டுடன் சம்பந்தப்பட்டது. தாங்கள் கூறும் விடயத்தை நாம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பேசுவோம். அங்கு பேசினால் தான் முடிவொன்று வரும்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் அவர்கள் மாவட்ட மட்டத்தில் இருப்பதால், இதே போன்ற பிரச்சினை அனைத்தும் ஒப்பந்தகாரர்களுக்கும் உள்ளது. எனவே இது தொடர்பாக சபையில் ஏகமனதாக தீர்மானமெடுத்து மாவட்ட திட்டமிடல் பணிப்பாளருக்கு கடிதம் அனுப்புவோம்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இந்த 04 மில்லியன் வேலைத்திட்டம் தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தான் முடிவு செய்கின்றனர். வேண்டுமானால் மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டத்திற்கு நாம் கடிதமனுப்புவோம். நாம் முடிவெடுக்க முடியாது.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

மாவட்ட திட்டமிடல் குழுவிற்கு கடிதம் அனுப்புவோம், என்று தான் நான் கூறுகின்றேன். இன்னொரு விடயம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தவிசாளர் அவரகள் எதுவுமே பேசுவதில்லை. இது நாங்கள் கண் கூடாக கண்டவொரு விடயம்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அங்கு கூற வேண்டிய விடயங்களை நான் முன்சென்று கூறியிருந்தேன். தாங்களுக்குள்ள பிரச்சினையை தாங்கள் பேச வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

அம்பகமுவ தவிசாளர் எல்லா தவிசாளர்கள் அனைவரும் பேசினார்கள், இவ்விடயம் பேசப்பட்டதா என நான் கௌரவ உறுப்பினர் சுரேஸ்குமார் அவர்களிடம் கேட்டேன் அவர் இல்லையென கூறினார்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

தாங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி தொடர்பாக நான் எப்படி பேசுவது? பொதுவான மக்கள் பிரச்சினைகளை நான் பேசுவேன். மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர், ஒரு திட்டமிடல் குழு என்பன உள்ளன. அங்கு நான் என்ன செய்ய முடியும். பிறகு நான் தடை பண்ணுவது போல இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

எடுத்து கூறலாம் தானே தவிசாளர் அவர்களே? கௌரவ உறுப்பினர்களுக்கு அங்கு பேசுவதற்காக வழங்கப்படும் நேரம் மிகவும் குறைவு, தாங்களுக்கு நேரம் வழங்கப்படுகின்றதல்லவா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

நீங்கள் பேச வேண்டிய விடயத்தை பேசலாம், உங்கள் விடயத்தை நான் பேச முடியாது. அவரவர்களுக்கு உள்ள பிரச்சினையை பேசலாம், அங்கு யாரையும் பேச கூடாது என்று கூறவில்லையே?

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கால நிர்ணயமே பிழையே, அம்பகமுவ தவிசாளர் 15 நிமிடங்கள் பேசுகின்றார், தாங்கள் அவ்வளவு பேசுவதில்லையே?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அவர் பேசுவார் அவர் தான் கட்சி அமைப்பாளர், மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பேசுவதாக தாங்கள் கூறுகின்றீர்கள், பேச வேண்டிய விடயத்தை ஒரு வார்த்தையில் கூட சொல்லாம் அதற்கு 15 நிமிடங்கள் எடுத்து தான் பேசவேண்டும் என்றில்லை.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

சபையில் சில தீர்மானமெடுத்து மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பேசுவதாக தாங்கள் கூறுகின்றீர்கள், நாங்கள் அந்த நம்பிக்கையில் இருப்போம், அது சம்பந்தப்பட்ட விடயம் அங்கு பேசப்படுவது இல்லை என்றால் சபையில் நாங்கள் பேசுவதில் பயனில்லையே?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

நான் பேசவில்லை என்று தாங்களுக்கு எப்படி தெரியும், சமூக ரீதியாக பேச வேண்டிய விடயங்களை நான் பேசியுள்ளேன். முக்கியமான விடயங்களை நான் பேசுவேன்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

ஏற்கனவே வாக்காளர் பட்டியல் தொடர்பான பிரேரணை முன்வைக்கபட்டு மாவட்ட ஒருங்கிணைக்கு குழு கூட்டத்தில் பேசுவதாக கூறப்பட்டது. அவ்வாறு அங்கு பேசி அதற்கு தீர்வு எட்டப்பட்டிருந்தால் நான் ஏன் இம்முறையும் அதே பிரேரணையினை முன்வைக்கின்றேன்? சபையில் பேசும் விடயங்களை அங்கு பேசவும் இல்லையென்றால் தீர்மானத்தை எங்களிடம் தாருங்கள் நாங்கள் சென்று பேசுகின்றோம், எனக்கு எந்த பயமும் இல்லை.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இங்கு பேசிய விடயங்களை நான் பேசியுள்ளேன், பேசவில்லை என்று கூற முடியாது, பேச தேவையே இல்லாத விடயமொன்றை நான் அங்கு சென்று பேச முடியாது, வாக்காளர் பட்டியல் தொடர்பாக கிராம உத்தியோகத்தர்களினூடாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**தீர்மான இல 01**

மேற்குறிப்பிட்ட கடிதத்திற்கு அமைவாக வேலைத்திட்டத்தினை 2022ம் ஆண்டில் மேற்கொள்ள சபை அனுமதி வழங்கியது.

**கடித இல 03**

**அனுப்புனர்** - உள்ளூராட்சி துணை ஆணையாளர் காரியாலயம்.

**விடயம்** - ஜனவரி மாத சபையமர்வு அறிக்கை அவதானிப்பு கடிதம்.

**கடித இல 04**

**அனுப்புனர்** - உள்ளூராட்சி துணை ஆணையாளர் காரியாலயம்.

**விடயம்** - பெப்பரவரி மாத சபையமர்வு அறிக்கை அவதானிப்பு கடிதம்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

சபையமர்வு அவதானிப்பு கடிதத்தில் பிழை எதுவும் இல்லையென கூறப்பட்டுள்ளது. சில விடயங்கள் தொடர்பாக பேசப்பட்ட போதும் அதாவது சமுரத்தி, கிராம உத்தியோகத்தர்கள் தொடர்பாக பேசப்படும் அறிக்கையில் குறைபாடு இல்லையென கூறியுள்ளனர். நான் இம்முறைபோட்ட பிரேரணைகளில் மஸ்கெலியா வைத்தியசாலையில் முறையான ஆய்வு கூட வசதி, ஆய்வு கூட பரிசோதனை தொழிநுட்பவியலாளர்கள் இல்லையென நான் சமர்ப்பித்திருந்த விடயத்தை சபை சட்டத்திட்டங்களுக்கு கீழ் இவ்விடயம் உள்ளடங்கவில்லை என நிராகரித்துள்ளீர்கள் இரண்டாவது விடயம் எங்களுக்கு சேவை செய்யும் உத்தியோகத்தர்களுக்கு நினசவென என்ற ஒரு திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராம சேகர் பிரிவிற்கும் 20 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு அதிகாரிகளுக்கான கட்டிடம் அமைத்துக்கொடுக்கப்படும், எனவே இதனை சபையில் பிரேரணையாக சமர்ப்பித்து தீர்மானமெடுத்து கடிதம் மூலம் அனுப்புவதற்கு தான் சமர்ப்பித்திருந்தேன், எனினும் 02 பிரேரணைகளை நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படவில்லை, அது ஏன்?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இவற்றை தாங்கள் ஒரு முறைப்பாடாக முன்வைக்கலாம். கடந்த சபையிலும் இது கடந்த மாத சபையிலும் நான் தெளிவாக கூறியிருந்தேன். இனி சபை சட்டத்திட்டங்களுக்கு அமைவாக தான் செல்லும்.

**கடித இல 05**

**அனுப்புனர்** - உள்ளூராட்சி திணைக்களம் - மத்தியமாகாணம்.

**விடயம்** - கௌரவ உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்ளும் போது பின்பற்ற வேண்டிய விதிமுறைகளை உள்ளடக்கிய கடிதம்.

**கடித இல 06**

**அனுப்புனர்** - உள்ளூராட்சி துணை ஆணையாளர் காரியாலயம்.

**விடயம்** - கௌரவ தவிசாளரின் இணைப்பு செயலாளர் தொடர்பான கடிதம்.

**தீர்மான இல 02**

தற்போதுள்ள கௌரவ தவிசாளரின் இணைப்பு செயலாளருக்கு பதிலாக வேறு ஒரு நபரை தவிசாளரின் இணைப்பு செயலாளராக மாற்றும் விடயத்தினை சபை ஏற்றுக்கொண்டது.

**கடித இல 07**

**அனுப்புனர்** - உள்ளூராட்சி துணை ஆணையாளர் காரியாலயம்.

**விடயம்** - வீதி விளக்குகள் பாவனையினை 50% இனால் குறைக்குமாறு கூறியுள்ள கடிதம்.

**கடித இல 08**

**அனுப்புனர்** - உள்ளூராட்சி திணைக்களம்.

**விடயம்** - கணக்கீட்டு ஐய வினாக்கள் தொடர்பான கடிதம்.

**தீர்மான இல 03**

கணக்கீட்டு ஐய வினாக்கள் தொடர்பாக பதில்களை குறத்த காலத்தினுள் அனுப்ப சபை தீர்மானித்தது.

**கடித இல 09**

**அனுப்புனர்** - விடயப்பொறுப்பாளர் - மஸ்கெலியா பிரதேச சபை.

**விடயம்** - 2021ம் ஆண்டுக்கான பொருட்க்கணிப்பீட்டு அறிக்கை.

**தீர்மான இல 04**

பொருட்கணிப்பீட்டு அறிக்கையினை சபை ஏற்றுக்கொண்டதுடன், சபையிலிருந்து கழிக்கப்பட்ட பொருட்களை ஏல விற்பனை மூலம் விற்பனை செய்ய சபை தீர்மானித்தது.

**கடித இல 10**

**அனுப்புனர்** - காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்.

**விடயம்** - 08ம் வீதியிலுள்ள ஆயர்வேத வைத்தியசாலை அமைந்துள்ள இடத்தின் உரிமையை மஸ்கெலியா பிரதேச சபைக்கு பெற்றுக்கொடுத்தல் தொடர்பான கடிதம்.

**கடித இல 11**

**அனுப்புனர்** - பொதுமக்கள் - பாக்ரோ 220 ஏக்கர்

**விடயம்** - பாதை செப்பனிடுவது தொடர்பான கடிதம்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

பெப்ரவரி மாதம் 22ம் திகதி பதிவு தபால் மூலம் குமரேசன் அதிபர், இல 43, நோட்டன் வீதி என்று முகவரியிடப்பட்டவரிடம் இருந்து சபைக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தார் அக்கடிதம் சபையில் வாசிக்கப்படவில்லை.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அக்கடிதம் சபையின் முறைப்பாட்டு புத்தகத்தில் பதியப்பட்டு உரிய அதிகாரிகளை களப்பரிசோதனைக்கு அனுப்பியுள்ளேன், எனவே 02 தரப்பினரையும் அழைத்து இவ்விடயம் தொடர்பில் பேசுவோம். அடுத்ததாக நிதி மற்றும் ஏனைய குழு அறிக்கைகளை சபைக்கு சமர்ப்பித்தல்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

நிதிக்குழு அறிக்கையில் விடய இல 10 சுகாதார பொருட்கள் கொள்வனவு தொடர்பாக விடயம் கலந்துரையாடப்பட்டுள்ளது அதற்கான தீர்மானம் என்ன? அல்லது மீண்டும் விலைமனுகோருவதற்கா? டிசம்பர் 31ம் திகதி இறுதி திகதி என்று குறிப்பிட்டு விலைமனுகோரல்கள் பெறப்பட்டன.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

சில பொருட்களின் Brand இனை மாற்றி விலைமனுகோர தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் விலைமனுவினை பெறுவதற்கு காலநீடிப்பு செய்துள்ளோம்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

நிதிக்குழு அறிக்கையிலே விடய இலக்கம் 11இல் கர்பிணி தாய்மார்களுக்கான சில பொருட்களை பெற்றுக்கொடுப்பது தொடர்பான விடயம் கலந்துரையாடப்பட்டுள்ளது. நல்ல விடயம் தவிசாளர் அவர்களுக்கு நன்றி. எத்தனை பேருக்கு அப்பொருட்கள் வழங்கப்பட்டது? எவ்வளவு தொகை செலவிடப்பட்டது?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

96ஆயிரம் செலவிடப்பட்டுள்ளது, 35 கர்பிணி தாய்மார்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

நிதிக்குழு அறிக்கையிலே இவ்விடயம் சிபாரிசாக தானே உள்ளது? சபையின் அனுமதிக்கு இவ்விடயம் முன்வைக்கப்பட்டதா? ஏனைய விடயங்களை செய்ய சபை அனுமதியினை கோருகின்றோம். ஆனால் இவ்விடயம் செய்து முடிக்கப்பட்டுள்ளது. இது பாதீட்டில் உள்ள விடயம் தானே? பாதீடு டிசம்பர் மாதம் நிறைவேற்றப்பட்டு விட்டது தானே? அப்படியானால் இந்த திகதியில் இவ்விடயத்தை செய்யப்போகின்றோம் என்று தெரியும் தானே? அப்படியானால் கடந்த சபைக்கு சரி இவ்விடயத்தை முன்வைத்திருக்கலாம் தானே?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இவ்வாறான நிறைய விடயங்களை செய்து முடித்துவிட்டு செலவறிக்கையில் காட்டியுள்ளோம் தானே? மற்றொரு விடயம் நிதிக்குழு குறிப்பிட்ட ஒரு தொகையினை சிபாரிசு செய்ய முடியும் தானே?

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

தவிசாளர் அவர்களே இது சபை நிதி, இதனை விநியோகிக்கும் போது அனைத்து கௌரவ உறுப்பினர்களுக்கும் அறிவித்திருக்க வேண்டும் தானே? யாருக்கும் தெரியாது, கௌரவ உறுப்பினர் ராஜ்குமார் அவர்கள் கூறியது போல மின்விளக்கு பொருத்த ஒரு சிறிய பொருளை கொள்வனவு செய்ய வேண்டுமாக இருந்தாலும் சபையின் அனுமதியை பெறுகின்றோம், இதற்கு அனுமதி எடுக்கவில்லையே.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

குறிப்பிட்ட நேரத்திற்குள் செய்ய வேண்டும் என்பதற்காக நிதிக்குழுவின் சிபாரிசுடன் இவ்விடயத்தை செய்திருந்தோம். மேலும் பாதீட்டறிக்கையிலும் பெண்களுக்காக நிதி ஒதுக்கப்பட்டு பாதீட்டறிக்கையும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

அப்படியானால் ஏன் ஏனைய உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படவில்லை?

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

பாதீட்டிற்கு ஆதரவு கொடுத்தவர்கள் மாத்திரம் தான் வந்திருந்தனர்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

எங்கே ஆதரவு கொடுத்தவர்களும் இல்லையே.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

தாங்களின் விசேட அறிக்கையில், பாதீட்டறிக்கைக்கு ஆதரவு வழங்கியவர்களை தாங்கள் அழைத்ததாக கூறினீர்கள்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

ஆம், பாதீட்டறிக்கைக்கு ஆதரவு கொடுத்தவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்க வேண்டும் தானே? கொடுக்காதவர்களுக்கு நன்றி சொல்ல முடியாதே.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இவ்விடயம் தொடர்பாக செயலாளரிடம் நான் கேட்ட போது, இது என்னுடைய திட்டமில்லை, அனைத்தும் தவிசாளர் தான் தீர்மானித்துள்ளார் என்று கூறியிருந்தார். இவ்விடயம் தாங்களின் தனிப்பட்ட வேலைத்திட்டமாக இருந்தால் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. இது சபை பணம், பொதுமக்களின் பணம் இதனை ஒரு குறிப்பிட்ட சாரரரை வைத்து செய்ததனை ஏற்றுக்கொள்ள முடியாது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இதே சபை நிதி அந்த பாதீட்டறிக்கையினை நிவேற்ற குறிப்பிட்டவர்கள் தான் ஆதரவை வழங்கியிருந்தார்கள், அப்போது நான் அவர்களுக்கு சொல்ல தான் வேண்டும், அத்துடன் வருடாந்த வரி அறவிடுவதற்கும் தாங்கள் ஆதரவு வழங்கவில்லை.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

அறிக்கையில் எழுதிக்கொள்ளுங்கள், பாதீட்டறிக்கைக்கு யார் ஆதரவு கொடுத்தார்களோ அவர்களுக்கு மாத்திரம் தான் அனைத்து விடயங்களையும் அறிவிப்பார்களாம், ஏனையவர்களுக்கு அழைப்பு இல்லையாம்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

வழமையாக நிதிக்குழுவில் கலந்துரையாடப்படும் விடயங்கள் மாதாந்த சபையமர்வில் அனுமதி எடுத்ததன் பின்னர் தான் சில செலவுகள் செய்யப்பட வேண்டும், என்று தான் இவ்வளவு காலம் உள்ளது. ஆனால் இப்போது பொருட்களை விநியோகம் செய்துவிட்டு, இந்த நிதிக்குழு அறிக்கையை சபை அனுமதிக்கு முன்வைத்துள்ளது ஏன்? ஒவ்வொருமுறையும் நிதிக்குழு சிபாரிசிற்கு ஒவ்வொரு கௌரவ உறுப்பினர்கள் ஏதாவதொரு முன்மொழிவை வைப்பார்கள். சில வேளைகளில் திருத்தங்கள் செய்ய வேண்டிய நிலையும் ஏற்படும். இதில் திருத்தம் செய்ய ஒன்றுமே இல்லையே பொருட்களை விநியோகித்து முடிந்து விட்டதே, இவ்வாறு செலவு செய்துவிட்டு பின்னர் சபைக்கு சமர்ப்பித்த விடயங்கள் எதுவுமே இல்லையே. இது தான் முதல் தடவை. இவ்வேலைத்திட்டம ஒரு நல்ல விடயம் அதில் எங்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை. சபைக்கு ஏன் இவ்விடயத்தை சமர்ப்பிக்கவில்லை? இவ்வாறு சபை அனுமதி இல்லாமல் செய்யப்பட்டு பின்னர் சபைக்கு சமர்ப்பித்த வேலைத்திட்டம் ஏதாவது இருந்தால் கூறுங்கள் பார்ப்போம்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கொவிட் - 19 காலப்பகுதியில் தொற்று நீக்கிகள் பெற்றுக்கொடுத்துள்ளோம். அவற்றை கொள்வனவு செய்துவிட்டு தான் சபைக்கு சமர்ப்பித்திருந்தோம்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இல்லை அது சபைக்கு சமர்ப்பித்து பின்னர் தான் அவை வழங்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ தலைவர் அவர்களே கொவிட் - 19 காலப்பகுதியில் வழங்கியது அவசர தேவை காரணமாக தான், ஆனால் இவ்விடயமொன்று அவ்வளவு அவசரமான ஒன்று இல்லையே, சாதாரண ஒரு 5000.00 செலவை செய்யவும் சபை அனுமதியினை பெறுகின்றோம் தானே? பெண்கள் தினத்திற்காக வழங்குவதென்றால் இம்மாதம் முழுவதிலும் வழங்க முடியும். பிரச்சினை இல்லை. இவ்விடயத்தை கூறுவதனால் நான் பெண்களுக்கு எதிரானவன் இல்லை. நான் வைத்தியசாலையின் செயலாளர் அந்த ரீதியில் பொருட்களை வழங்கி வைத்தமைக்கு நன்றி. ஆனால் சபையின் 01 இலட்சம் ரூபா நிதியினை எடுத்து செலவழிக்க சபை அனுமதியினை பெற்றிருக்க வேண்டும். பாதீட்டில் அனுமதி பெற்ற விடயமாக இருந்தாலும் சபையில் அனுமதி பெற வேண்டும் தானே?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

நிதிக்குழு சிபாரிசின் அடிப்படையில் தான் நாங்கள் செய்தோம். நிதிக்குழு அனுமதி கொடுத்தால் அதனை செய்து தானே ஆக வேண்டும்?

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ தவிசாளர் அவர்களே கடந்த காலங்களில் நிதிக்குழு சிறு சிறு விடயங்கள் பலவற்றிற்கு சிபாரிசு செய்துள்ளது அவற்றை செய்யவில்லை. உதாரணமாக வீதி விளக்குகள் பழுதடைந்திருந்தால் அவற்றை திருத்துவதற்கான நடவடிக்கை கூட இன்றும் இல்லை. ஒவ்வொரு வீதி மின்விளக்குகளை கழற்றி 06,07மாதாங்களாகின்றது. அதனை செய்து கொடுக்க இயலாது. 2000.00ரூபாவிற்கும் குறைவான ஒரு மின்குமிழையே மாற்றி போட முடியவில்லை, ஆனால் தற்போது நிதிக்குழு சிபாரிசினை வைத்து இவ்வேலைத்திட்டத்தை செய்யலாம். தாங்களுக்கு தேவையான விடயங்களை நிதிக்குழு அனுமதியுடன் செய்வீர்கள், ஏனையவற்றை செய்ய மாட்டீர்கள்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

பெண்களை நான் என்றும் போற்றுகின்றேன், அவர்களுக்காக இவ்வேலைத்திட்டத்தை செய்தமைக்கு நன்றி. ஆனால் நிதிக்குழு அறிக்கையை சபைக்கு சமர்ப்பித்திருந்தால் இது பெண்களுக்கான சிறப்பான ஒரு வேலைத்திட்டம் என்று கூறி இவ்விடயத்தை மேற்கொள்ளுங்கள் என்று கூறியிருப்போம். ஆனால் இவ்விடயத்தை செய்துவிட்டு சபைக்கு போடும் போது ஏதாவது காரணத்தினால் அது Surchage செய்யும் போது அனைவரையும் தான் பாதிக்கும். நிதிக்குழு சிபாரிசு தான் செய்துள்ளது சபை அனுமதி வழங்கவில்லை. பெண்களுக்காக இதைவிட அதிகளவில் வேலைத்திட்டத்தை செய்யுங்கள் எந்த பிரச்சினையும் இல்லை, ஆனால் சபைக்கு சமர்ப்பித்திருக்க வேண்டும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

நிதிக்குழு சிபாரிசுடன் தான் செய்யப்பட்டுள்ளது. சபைக்கு தாங்கள் மாத்திரம் உறுப்பினர் இல்லையே ஏனையோரின் அனுமதியினையும் பெற வேண்டும் தானே?

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

அப்படியானால் எனது தனிப்பட்ட கருத்து, இவ்விடயம் தொடர்பாக எங்களுக்கு ஒரு விடயமும் தெரியாது, செய்து முடிக்கப்பட்ட வேலைக்கு சபை அனுமதியினை கோருவதற்கு நான் எனது எதிர்ப்பை தெரிவித்துக்கொள்கின்றேன். இவ்விடயத்தில் என்ன நடந்தாலும் நான் அதற்கு எவ்வித தொடர்பும் இல்லை, பொறுப்பும் இல்லை.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ தவிசாளர் அவர்களே தாங்கள் கூறிய கருத்தின்படி சபையின் நிதி தொடர்பான விடயங்களுக்கு நிதிக்குழு மாத்திரம் சிபாரிசு செய்தால் போதுமென்று தீர்மானமொன்றை எடுப்போம். சபை அனுமதிக்கு சமர்ப்பிக்க தேவையில்லை.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

நிதிக்குழு தொடர்பிலான பிரச்சினைகளை முன்வைக்கும் போது நிதிக்குழுவினால் தீர்மானங்களை மேற்கொள்ள முடியுமொன இதற்கு முன்னர் நீங்கள் கூறினீர்கள் மீண்டும் நாங்கள் கேள்விகளை முன்வைக்கும் போது நீங்கள் அதை மறுக்கின்றீர்கள், எனவே ஏதாவது ஒருமுறைமைக்குள் வாருங்கள்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கடந்த காலங்களில் 05 இலட்சம் ரூபா வரை தவிசாளரின் அனுமதியுடன் சபையில் செலவீனங்களை செய்யலாமென தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

05 இலட்சம் ரூபா வரை தவிசாளரின் அனுமதியுடன் செலவீனங்களை செய்யலாம் என்றால் ஏன் இந்த அறிக்கைகளை சபைக்கு சமர்ப்பிக்கின்றீர்கள்?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

சபைக்கு போட வேண்டும் என்ற காரணத்துக்காக தான் சமர்ப்பிப்பித்துள்ளோம். ஏற்கனவே நிதிக்குழு அறிக்கை சபைக்கு சமர்ப்பிப்பதில்லை தாங்கள் பார்க்க வேண்டும் என்பதற்காக தான் சபைக்கு சமர்ப்பிக்கின்றோம்.

**கௌரவ உப தவிசாளர் P.P.பிரதீபன் அவர்கள் (இ.தொ.கா)**

நடைபெற்ற இவ்விடயம் உண்மையிலே வரவேற்கத்தக்க விடயம் கௌரவ தவிசாளரின் அதிகாரத்தை கொண்டு அல்லது நிதிக்குழுவில் செய்யப்பட்ட சிபாரிசின் அடிப்படையில் இவ்விடயத்தை முன்னெடுத்துள்ளதா கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தது. இங்கு நிதிக்குழுவிலே இவ்வளவு நேரமாக வெறுமனே தவிசாளர் மாத்திரமே இங்கு பதில் கூறிக்கொண்டிருக்கின்றீர்கள். ஏனைய நிதிக்குழு உறுப்பினர்கள் மௌனமாக இருப்பது இங்கு ஒரு சர்ச்சையாக ஏற்படுத்துகின்றது. இது என்னுடைய கருத்து. இன்னொரு விடயம் சபை நிதியினூடாக யாதேனும் செயற்பாடுகளை முன்னெடுப்பதாக இருந்தால் சபை அனுமதியினை பெறுவது வழமை. தவிசாளர், நிதிக்குழுக்கென சில அதிகாரங்கள் உள்ளது. ஆனால் இங்கு நிதிக்குழுவின் கருத்துக்களின் ஒன்று தெரிவிக்கப்படவில்லை. எனவே நிதிக்குழு உறுப்பினர்களின் கருத்துக்களை தெரிவிக்கவும்.

**கௌரவ ஊறப்பினர் S.A.திஸாநாயக்க அவர்கள் (ஸ்ரீ.பொ.பெ)**

நிதிக்குழு கூடி சமூகத்திற்கு சேவையாற்ற வேண்டிய தேவையுள்ளது என கூறுவதென்றால் அதற்காக நிதிக்குழு சரி பிழை எதுவென்று தேடிபார்த்துதான் தீர்மானங்களை மேற்கொள்கின்றது, அவ்வாறான கலந்துரையாடலின் பின்னர் தீர்மானங்களை மேற்கொண்டு தான் மகளீர் தினத்தன்று 35 கர்பிணி தாய்மார்களுக்கு பொருட்கள் வழங்கப்பட்டது. அவர்கள் கேள்வியை கேட்டது தவிசாளரிடம் என்பதால் தான் நிதிக்குழு உறுப்பினர்கள் அமைதியாக இருக்கின்றார்கள் என நான் கூறினேன், கேள்வி கேட்பது நிதிக்குழுவிடம் அல்ல தவிசாளர் அவர்களுக்கு ஏதாவது தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரம் உண்டு என்றால் தாங்கள் எப்படி நிதிக்குழுவின் அனுமதியினை பெற்றுக்கொண்டு நிதியினை கையாள முடியும் என்பதனை கேட்டு அதன் சட்டரீதியான நிலையினை கருதி தாங்களுக்கு செயற்பட முடியும், இங்கே விவாதத்தினை மேற்கொள்ளாது, உரிய நிறுவனங்களையும் உரிய சட்டத்தையும் தொடர்புபடுத்தி செயற்பட்டு இந்த நிதியினை நீங்கள் எவ்வாறு கையாண்டீர்கள் என்பதனை கேட்டால் அவர்கள் அச்சட்டத்தின் படி பதில் தருவார்கள், உறுப்பினர்களுக்கும் இடையில் மோதலை ஏற்படுத்த அவசியமில்லை. அதற்காக நிதிக்குழு அனுமதி வழங்கியுள்ளது, அது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கான எதிர்பை தெரிவிக்க வேண்டும் என்றால் உரிய நிறுவனத்திற்கு அந்த எதிர்பபை தெரிவியுங்கள் அப்போது அந்த நிறுவனத்தில் இருந்து அதற்கான பதிலை தருவார்கள்.

**கௌரவ உறுப்பினர் A.ரவீந்திரராஜா அவர்கள் (ஐ.தே.க)**

கர்பிணி தாய்மார்களுக்கான பொருட்கள் வழங்கி வைத்தமை உண்மையில் வரவேற்கதக்க விடயமாகும். இருந்தாலும் இந்ெ மஸ்கெலியா பிரதேச சபையின் 10 வட்டாரங்களில் தவிசாளர் உட்பட 16 உறுப்பினர்கள் உள்ளோம். இந்த 10 வட்டாரங்களில் யார் யாருக்கு இது வழங்கப்பட்டது என்று யாருக்கும் தெரியாது. நானும் ஒரு பிரதேச சபை உறுப்பினர் எனக்கும் ஒரு வட்டாரம் உள்ளது. எனது வட்டாரத்தில் எத்தனை பேருக்கு இது கிடைக்கப்பெற்றது என்பது தெரியாது. எனவே இவை யாருக்கு வழங்கப்பட்டது தொடர்பான விபரங்களையும் கூறினால் நன்றாக இருக்கும் என்பது எனது கருத்து. சபையின் நிதியினை செலவழித்துள்ள ஒரு விடயம் என்பதனால் அனைத்து உறுப்பினர்களுக்கும் இவ்விடயத்தை அறியத்தர வேண்டும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் அவர்களே மாதாந்த பரிசோதனைக்கு வரும் கர்பிணி தாய்மார்கள் வைத்தியசாலைக்கு தான் வருவார்கள் பிரதேச சபைக்கு வருவதில்லை. வைத்தியசாலையில் தான் அவர்கள் எந்தெந்த பிரதேசத்தை சேர்ந்தவர்கள் தொடர்பான பெயர் விபரங்கள் இருக்கும். மகளீர் தினத்தை முன்னிட்டு ஒரு வேலைத்திட்டம் செய்கின்றோம், அவர்கள் எப்போது வைத்தியசாலைக்கு வருவார்கள் என்று கேட்டோம். அதற்கமைவாக தான் அன்றைய தினம் நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தோம். அப்படியானால் மக்களுக்கு வேலை செய்ய கூடாது என்று கூறுகின்றீர்களா?

**கௌரவ உறுப்பினர் A.ரவீந்திரராஜா அவர்கள் (ஐ.தே.க)**

ஆனால் யாருக்கு அவற்றை வழங்கினோம் என்ற விபரத்தை நாம் எடுக்க வேண்டும் தானே?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கர்பிணி தாய்மார்களுக்கு வழங்கப்பட்டு அது தொடர்பான புகைப்படங்கள் எல்லாம் போட்டுள்ளோம்.

**கௌரவ உறுப்பினர் A.ரவீந்திரராஜா அவர்கள் (ஐ.தே.க)**

சபையினூடாக எங்களுக்கு ஒரு வீதி மின்விளக்கு வழங்கினால் கூட அம்மின்விளக்கு எங்கே பொருத்தினோம், அவ்விடம் எவ்வாறு உள்ளதென புகைப்படம் கேட்கின்றீர்கள், அதனால் சபையினால் பொருட்கள் வழங்கும் போது யாருக்கு கொடுத்தோமென அடையாளப்படுத்த தானே வேண்டும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கர்பிணி தாய்மார்களுக்கு தான் வழங்கினோம், இது தொடர்பான தாஸ்தாவேஜிகள் புகைப்படங்கள் எல்லாம் உள்ளது. இது சம்பந்தமான பிரச்சினை ஏற்படும் போது நாங்கள் அனைத்தையும் கொடுப்போம்.

**கௌரவ உறுப்பினர் A.ரவீந்திரராஜா அவர்கள் (ஐ.தே.க)**

மஸ்கெலியா வைத்தியசாலைக்கு 10 வட்டாரத்திலும் உள்ள கர்பிணிதாய்மார்கள் அனைவரும் வருவதில்லை. ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு இடத்தை தெரிவு செய்து அங்கு தான் மாதாந்த பரிசோதனையை ணரு இடத்தை தெரிவு செய்து அங்கு தான் மாதாந்த பரிசோதனையை செய்கின்றனர். மஸ்கெலியா வைத்தியசாலைக்கு வருவது ஒன்று மஸ்கெலியா நகரத்திலுள்ளவர்களும் நகரத்தை அண்டியவர்களும் தான். தூர பிரதேசத்தில் கஸ்டமான கர்பிணி தாய்மார்கள் இருப்பார்கள், அவர்களுக்கு கிடைக்கப்பெற்றதா என்ற விபரங்கள் தெரிய வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

வேண்டுமானால் இன்னுமொரு 05 இலட்சம் ரூபா செலவழித்து 10 வட்டாரத்திலுள்ள அனைத்து கர்பிணிதாய்மார்களுக்கும் வழங்குங்கள் அது பிரச்சினை இல்லை எங்களுக்கு சந்தோசம் தான்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

தவிசாளருக்குள்ள அதிகாரங்கள் நிதி தொடர்பான விடயங்கள் தொடர்பாக இதில் உள்ளது. அதனடிப்படையில் நிதி செலவிடப்பட்டுள்ளது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

நிதிக்குழு அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டதா?

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

நிதிக்குழு அறிக்கையிலே இவ்விடயம் அல்லது வேறு நிறைய விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன. இதில் ஒவ்வொரு விடயங்களுக்கும் செலவுகளை செய்துவிட்டு தான் இங்கு சபைக்கு சமர்ப்பித்தீர்களா, இல்லையே அப்படியென்றால் நடைமுறை ஏன் மாறியது?

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

நல்லதண்ணி கமிசன் டென்டரில் வழங்கப்பட்டுள்ள வாகன தரிப்பிடத்தில் நடைபெறும் விடயங்கள் தொடர்பாக சற்று கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன். அங்கு நடைபெறும் சம்பவங்கள் தொடர்பாக நான் சில விடயங்களை கேள்விப்பட்டேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் அவர்களே கணக்காய்வு திணைக்களத்திலும் இது தொடர்பாக பரிசீலனை செய்யுமாறு கூறியுள்ளனர்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கடைசியாக ஒரு விடயம் கௌரவ உறுப்பினர் சுரேஸ்குமார் அவர்கள் கூறியது போல சட்டத்திட்டங்களுக்கு அமைவாக தவிசாளர் தனது அதிகாரத்தை கொண்டு 05 இலட்சத்துக்கு குறைவான செலவீனங்களை செய்யலாமென ஒரு தீர்மானமொன்றை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். அப்படி செய்தால் இலகு தானே சபைக்கு இவ்விடயங்களை செய்து விட்டோம் என்று சபையில் பார்வையிட மட்டும் சமர்ப்பித்தால் போதும்.

**கௌரவ உறுப்பினர் T.வசந்தகுமார் அவர்கள் (இ.தொ.கா)**

நிதிக்குழு அறிக்கை சரியென முன்மொழிகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தராஜ் அவர்கள் (இ.தொ.கா)**

அதனை நான் வழிமொழிகின்றேன்.

**2022.02.21, 2022.03.07ம் திகதி நடைபெற்ற நிதிக்குழு அறிக்கைகளின் சிபாரிசுகள் பின்வருமாறு தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டது.**

**2022.02.21 நிதிக்குழு அறிக்கை**

**விடய இல 01**
2022ம் ஆண்டு மஸ்கெலியா பிரதேச சபையின் காரியாலயத்திற்கு தேவையான காகிதாதி பொருட்களை கொள்வனவு செய்வதற்கான விலைமனுகோரல்கள் நிதிக்குழுவில் திறக்கப்பட்டன.

**தீர்மான இல 05**
முன்வைக்கப்பட்ட விலைமனுக்களில் உயர் தரத்தினையும் குறைந்த விலையினையும் கருத்திற் கொண்டு பேப்பர் லைன் டிரேடிங் மற்றும் எல்.எச். சந்திரசேகர என்ட் பிரதர்ஸ் நிறுவனங்களில் கொள்வனவு செய்ய சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 02**
2022ம் ஆண்டுக்கான மஸ்கெலியா பிரதேச சபைக்கு அவசியமாக டோனர் வகைகளை கொள்வனவு செய்யதற்கான விலைமனுகோரல்கள் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டன.

**தீர்மான இல 06**
முன்வைக்கப்பட்ட விலைமனுக்களில் உயர் தரத்தினையும் குறைந்த விலையினையும் கருத்திற் கொண்டு டோனர்களை Office Shop & Shan Book Shop நிறுவனங்களில் கொள்வனவு செய்ய நிதிக்குழு சிபாரிசினை சபை ஏற்றுக்கொண்டது.

**விடய இல 03**
2022ம் ஆண்டுக்கான மஸ்கெலியா பிரதேச சபைக்கு அவசியமாக Printing Items என்பவற்றை கொள்வனவு செய்வதற்கான விலைமனுகோரல்கள் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டன.

**தீர்மான இல 07**
முன்வைக்கப்பட்ட விலைமனுக்களில் உயர் தரத்தினையும் குறைந்த விலையினையும் கருத்திற் கொண்டு New JS Printers நிறுவனங்களில் கொள்வனவு செய்ய நிதிக்குழு சிபாரிசினை சபை ஏற்றுக்கொண்டது.

**விடய இல 04**
2022ம் ஆண்டுக்கான மஸ்கெலியா பொது நூலகம் மற்றும் சாமிமலை வாசிகசாலைகளுக்கான பத்திரிகை கொள்வனவு செய்வதற்கான விலைமனுகோரல்கள் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 08**
முன்வைக்கப்பட்ட விலைமனுகோரல்களில் விலையினை கருத்திற்கொண்டு சாமுண்டேஸ்வரி பாமசியில் கொள்வளவு செய்ய சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 05**
2022ம் ஆண்டு மஸ்கெலியா பிரதேச சபையின் ஆயர்வேத வைத்திய மத்திய நிலையத்திற்கு அவசியமான சீலர் இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கான விலைமனுகோரல்கள் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 09**
முன்வைக்கப்பட்ட விலைமனுகோரல்களில் உத்தரவாத காலமும் தரமும் கூடிய விலையில் குறைந்தவற்றை கருத்திற்கொண்டு Hon Electronic நிறுவனத்தில் கொள்வனவு செய்ய நிதிக்குழு சிபாரிசினை சபை ஏற்றுக்கொண்டது.

**விடய இல 06**
மஸ்கெலியா பிரதேச சபையின் உரக்கடைக்கு தேவையான இலத்திரனியல் தராசினை கொள்வனவு செய்வதற்கான விலைமனுகோரல்கள் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 10**
முன்வைக்கப்பட்ட விலைமனுகோரல்களில் உத்தரவாத காலமும் தரமும் கூடிய விலையில் குறைந்தவற்றை கருத்திற்கொண்டு Hon Electronic நிறுவனத்தில் கொள்வனவு செய்ய நிதிக்குழு சிபாரிசு செய்த விடயத்தை சபை ஏற்றுக்கொண்டது.

**விடய இல 07**
ZB – 0394 இலக்கமுடைய கம்பக்டர் வாகனத்திற்கான டயர்களை கொள்வனவு செய்வதற்கான விலைமனு கோரல்கள் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 11**
முன்வைக்கப்பட்ட விலைமனுகோரல்களில் தரத்தினையும் விலையினையும் கருத்திற்கொண்டு பெரேரா டயர் நிறுவனத்தில் டயர்களை கொள்வனவு செய்ய நிதிக்குழு சிபாரிசு செய்த விடயத்தை சபை ஏற்றுக்கொண்டது.

**விடய இல 08**
ZB – 0394 இலக்கமுடைய கம்பக்டர் வாகனத்திற்கான பற்றரி கொள்வனவு செய்வதற்கான விலைமனு கோரல்கள் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 12**
முன்வைக்கப்பட்ட விலைமனுகோரல்களில் தரத்தினையும் விலையினையும் கருத்திற்கொண்டு மஸ்கெலியா டயர் ஹவுஸ் நிறுவனத்தில் டயர்களை கொள்வனவு செய்ய நிதிக்குழு சிபாரிசு செய்த விடயத்தை சபை ஏற்றுக்கொண்டது.

**விடய இல 09**
2022ம் ஆண்டுக்கான மின்குமிழ்களை கொள்வனவு செய்வதற்கான விலைமனுகோரல்கள் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டன.

**தீர்மான இல 13**
முன்வைக்கப்பட்ட விலைமனுகோரல்களில் உத்தரவாத காலம், தரம் மற்றும் வலை என்பவற்றை கருத்திற்கொண்டு என்.எம்.இம்ரா, நிவ் ஜெம் சிட்டி, கே.பி. என்டபிரைசஸ், லோடர்ஸ் டிரேட்வேஸ் மற்றும் ஏசியன் இலக்ரிக்கல் நிறுவனங்களில் குறித்த பொருட்களை கொள்வனவு செய்ய நிதிக்குழு சிபாரிசு செய்தவிடயத்தை சபை ஏற்றுக்கொண்டது.

**விடய இல 10**
2022ம் ஆண்டு மஸ்கெலியா பிரதேச சபையின் சுகாதார வேலைகளுக்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதற்கான விலைமனுகோரல்கள் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 14**
முன்வைக்கப்பட்ட விலைமனுக்களில் குறிப்பிட்ட விடயங்களின் Brand இனை கருத்திற்கொண்டு மீண்டும் விலைமனு கோருவதற்கும் ஏனைய பொருட்களுக்கு முன்வைக்கப்பட்ட விலைமனுக்களில் தரத்தினையும் விலையினையும் கருத்திற்கொண்டு பேப்பலைன்ட டிரேடிங், சன்திரா ஸ்டோர்ஸ், நிவ் சக்தி ஸ்டோர்ஸ் மற்றும் ஆர்.எம்.பீ.என்.ரத்னாயக்க ஆகிய நிறுவனங்களில் கொள்வனவு செய்ய நிதிக்குழு சிபாரிசு செய்த விடயத்தை சபை ஏற்றுக்கொண்டது.

**விடய இல 11**
2022ம் ஆண்டு மஸ்கெலியா பிரதேச சபைக்கு தேவையான மின் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான விலைமனுகோரல்கள் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 15**
முன்வைக்கப்பட்ட விலைமனுகோரல்களில் தரத்தினையும் விலையினையும் கருத்திற்கொண்டு ஆர்.எம். பீ. என்.ரத்னாயக்க நிறுவனத்தில் கொள்வனவு செய்ய நிதிக்குழு சிபாரிசு செய்த விடயத்தை சபை ஏற்றுக்கொண்டது.

**விடய இல 12**
2022ம் ஆண்டு பாதீட்டில் பெண்களுக்கான அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியில் கர்பிணி தாய்மார்களுக்கான சில பொருட்களை பெற்றுக்கொடுப்பது தொடர்பான விடயம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 16**
மேற்குறிப்பிட்ட விடயத்திற்கு விலைமனு கோர நிதிக்குழு சிபாரிசு செய்த விடயம் தொடர்பாக சபையில் ஆராயப்பட்டது.

**2022.03.07 நிதிக்குழு அறிக்கை**

**விடய இல 01**
2022ம் ஆண்டு பாதீட்டில் பெண்களுக்கான அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியில் கர்பிணி தாய்மார்களுக்கான சில பொருட்களை பெற்றுக்கொடுப்பது தொடர்பான விலைமனு கோரல்கள் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 17**

முன்வைக்கப்பட்ட விலைமனுகோரல்களில் விலையினையும் தரத்தினையும் கருத்திற்கொண்டு உதயம்ஸ் டெக்ஸ்டையில் நிறுவனத்தில் கொள்வனவு செய்ய சிபாரிசு செய்யப்பட்டது. மேலும் இவ்விடயமானது, 2020.02.11ம் திகதி நடைபெற்ற சபைமர்வின் தீர்மான இலக்கம் 03ன் படி கௌரவ தவிசாளருக்கு சபை நிதியின் 05 இலட்சத்திற்குட்பட்ட விடயங்களுக்கு அதிகார கையளிப்பிற்கு சபை அனுமதி வழங்கப்பட்டுள்ளமையினால் அதனடிப்படையில் குறித்த விடயம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டு நிதிக்குழு சிபாரிசின் அடிப்படையில் விலைமனுகோரப்பட்டு பின்னர் விலைமனுக்கள் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டு கர்பிணி தாய்மார்களுக்கான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கி வைக்கப்பட்டது என்பதற்கமைய இவ்விடயம் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**விடய இல 02**

உரக்கடையினை விரிவாக்கும் செயற்றிட்டத்திற்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்வது தொடர்பான விடயம் நிதிக்குழுவில் கலந்துரையாடப்பட்டது.

**தீர்மான இல 18**

மேற்குறிப்பிட்ட விடயத்தில் சில பொருட்களின் தரம் விலை என்பவற்றை கருத்திற்கொண்டு கொள்வனவு செய்ய நேரடியாக செல்ல வேண்டியுள்ளமையினால் நிதிக்குழு உறுப்பினர்களில் 04 பேரையும் உத்தியோகத்தர்கள் 02 பேரையும் உள்ளடக்கிய குழு ஒன்றினை நேரடியாக சென்று பொருட்களை கொள்வனவு செய்ய நிதிக்குழு சிபாரிசு செய்தது, மேலும் இரும்பு பொருட்களை கொள்வனவு செய்ய Crocodile Brand விநியோகத்தர்களிடம் இருந்து விலைமனுகோரவும் நிதிக்குழு சிபாரிசு செய்த விடயத்தை சபை ஏற்றுக்கொண்டது.

**விடய இல 03**

காரியாலயத்திற்கான காகிதாதி பொருட்களை கொள்வனவு செய்ய அனுப்பப்பட்ட விலைமனு கோரல்களில் தெரிந்தெடுக்கப்பட்ட நிறுவனத்தில் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பற்றாக்குறை காரணமாக போக்குவரத்து சேவையை வழங்க முடியாமையினாலும் நாளுக்கு நாள் அதிகரிக்கும் காகிதாதி பொருட்களின் விலை, மற்றும் அவற்றிற்கான கேள்வி காரணமாக காரியாலயத்தில் இருந்து நேரடியாக சென்று பொருட்களை கொள்வனவு செய்யுமாறு குறித்த நிறுவனத்தினால் கூறியுள்ள விடயம் நிதிக்குழுவில் கலந்துரையாடப்பட்டது.

**தீர்மான இல 19**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக நிதிக்குழுவில் கலந்துரையாடப்பட்டுள்ளமைக்கு அமைவாக சபையினூடாக போக்குவரத்து செலவினை ஏற்று பொருட்களை ஏற்றி வர நிதிக்குழு சிபாரிசு செய்த விடயத்தை சபை ஏற்றுக்கொண்டது.

**விடய இல 04**
மோகினி எல்ல பகுதியில் அசுத்த நீரை மக்கள் குடிநீருக்காக பயன்படுத்துவது தொடர்பான விடயம் நிதிக்குழுவில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

**தீர்மான இல 20**
குறித்த இடத்தில் அசுத்த நீரை பயன்படுத்த வேண்டமென அறிவித்தல் பலகை ஒன்றை வைக்க சபை அனுமதி வழங்கியது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்களின் பிரேரணையினை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

எனது முதலாவது பிரேரணையானது சாமிமலை, நல்லதண்ணி, லக்கம் பிரதேசங்களில் ஆயர்வேத வைத்தியசாலை அமைப்பது தொடர்பானதாகும். மஸ்கெலியா ஆயர்வேத வைத்தியசாலையில் 02 வைத்தியர்கள் உள்ளனர். நான் நினைப்பது படி 02 பேருக்கும் இங்கு அவ்வளவாக வேலைப்பளு இருக்காது, ஆகவே உப ஆயர்வேத வைத்தியசாலைகள் நிறுவப்படும் சந்தர்பங்களில் வாரத்தில் ஒரு நாள் சரி அந்த பிரதேசங்களில் நோயாளர்களையும் பரிசோதிக்கும் மருந்துகளை வழங்கவும் இலகுவாக இருக்கும். அத்தோடு இன்றைய சூழ்நிலையில் ஒருவர் நகரத்திற்கு வருவது கடிதம். தற்போது போக்குவரத்து

செலவீனங்களும் மிக அதிகம் எனவே அம்மக்களுக்கு அந்தந்த பிரதேசங்களிலே இந்த ஆயுர்வேத வைத்தியசாலையை அமைத்துக்கொடுத்தால் நன்மையாக அமையும்.

**கௌரவ உப தவிசாளர் P.P.பிரதீபன் அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் ஆனந்தன் அவர்கள் கூறியது போல அந்த யோசனை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்து, மஸ்கெலியா நகரில் ஒரு வைத்தியசாலை இருக்கின்றது என்பது 10 வட்டாரங்களிலுள்ள பொதுமக்கள் இதுவரை தெரிந்து வைத்திருக்கவில்லை, இந்த மூன்று நான்கு வட்டாரங்களை ஒன்றிணைத்து அதற்கான ஒரு ஆயர்வேத மத்திய நிலையமொன்றை ஏற்படுத்தினால் அது மிக பொருத்தமாக இருக்குமென நான் முன்மொழிகின்றேன், இவ்வேளையிலே கௌரவ உறுப்பினர் ஆனந்தன் அவர்கள் இவ்வாறான யோசனை ஒன்றினை முன்வைத்தமை தொடர்பில் நான் எனது நன்றிகளை கூறிக்கொள்கின்றேன். சிறந்த யோசனை மஸ்கெலியா பிரதேச சபை ஆரம்பிக்கப்பட்டு 04 வருடங்களை பூர்த்தி செய்திருப்பினும் கூட இது வரையில் 100 பேராவது இந்த ஆயர்வேத மத்திய நிலையத்திற்கு வருகை தந்திருக்க மாட்டார்கள் என்பது எனது கருத்து. மஸ்கெலியா ஆயர்வேத வைத்தியசாலை தொடர்பில் மக்கள் தெரிந்துக்கொள்ளவில்லை, எனவே இந்த யோசனை தொடர்பில் சபையின் அனுமதியினை பெற்றுக்கொண்டு இவ்வாறான ஆயுர்வேத மத்திய நிலையங்கள் சிலவற்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு எனது யோசனையை சபைக்கு முன்வைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

இப்பிரேரணை சபையிலே நிறைவேற்றப்படும் பட்சத்தில் இவற்றுக்கான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்பட வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ உறுப்பினர் ஆனந்தன் அவர்களின் பிரேரணையினை வழிமொழிவதோடு சாமிமலை நல்லதண்ணி, லக்கம் பிரதேசங்களில் ஆயுர்வேத உப வைத்திய நிலையங்களை கோரியுள்ளார், அதிலே வாரத்தில் ஒரு நாள் எமது வைத்தியர்கள் பிரசன்னமாகி வைத்திய சேவையை வழங்குவார்கள், அதற்கு மாற்று வழி நிறைய உள்ளன, கட்டிடங்களை பெற்றுக்கொள்வதில் பாரிய பிரச்சினைகள் ஏதும் இல்லை, வாடகைக்கு கூட கட்டிடங்களை பெறலாம்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் கொண்டு வந்துள்ள பிரேரணையானது நல்லதொரு விடயம் கட்டாயம் இவ்விடயம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும், ஆனால் இதற்கான செலவீனங்களை யார் செய்வது? சபை நிதி என்றால் நிதிக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும், பின்னர் அதில் பிரச்சினை வரும் எனவே இவ்விடயம் தொடர்பாக சற்று கவனம் செலுத்தவும், சபை நிதி பயன்படுத்தப்படுமா? அல்லது உறுப்பினர்களின் சொந்த நிதி பயன்படுத்தப்படுமா?

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ தலைவர் அவர்களே, சபையிலே பிரேரணை முன்வைத்து தீர்மானமெடுக்கும் சந்தர்ப்பத்தில் இங்கு தனிபட்ட உறுப்பினர் தனது சொந்த நிதியினை தருகின்றேன், ஆயர்வேத வைத்தியசாலையினை நிறுவுங்கள் என்று கூற எந்த உறுப்பினரும் வரவில்லை, நிதிக்குழு சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்சினை வேறு. அவறொரு கல்வி கற்ற ஆசிரியர் அதனால் இவ்விடயத்தில் தெளிவாக இருப்பார். சபையில் எடுக்கப்படும் தீர்மானத்திற்கு சொந்த நிதியினை செலவழிக்க வேண்டிய தேவை இருக்காது, சபை நிதி தான் செலவழிக்கப்படும். இதனை வேறு வகையான பிரச்சினையாக்க வேண்டாம், சபையினை அமைதியாக கொண்டு செல்ல வேண்டும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

முதலில் நிதிக்குழு தொடர்பாக பிரச்சினை எழுந்ததன் காரணமாக தான் அவர் இவ்வாறு கூறினார்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

செலவீனம் செய்யும் போது யார் செலவழிப்பது? சபை நிதியினை செலவழித்தமைக்கு அநாவசிய செலவுகள் செய்யப்படுவதாக கேட்டீர்கள்?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

சற்று முன் நிதிக்குழு விடயம் தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டதன் காரணத்தினால் தான் கௌரவ உறுப்பினர் எஸ்.சுரேஸ்குமார் அவர்கள் இவ்விடயத்தை சுட்டிக்காட்ட வந்தார்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

நிதிக்குழு தொடர்பாக பிரச்சினை ஏற்பட்ட விடயம் தொடர்பாக, ஏற்கனவே பிரேரணை முன்வைக்கப்பட்டிருந்ததா? இவ்விடயத்தை சபைக்கு சமர்ப்பித்திருந்தால் நாங்கள் ஒரு தீர்மானத்தை எடுத்திருப்போம் தானே? அப்படியானால் 30பேர் இல்லை 50பேருக்கு அனுமதிகொடுத்திருப்போம்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

ஆயர்வேத வைத்தியசாலையை நடத்த சபை செலவு செய்ய தேவையில்லை, வைத்தியர்களுக்கு சபையா சம்பளம் வழங்குகின்றது? இல்லையே? மருந்து கொள்வனவு செய்ய நிதி செலவிடப்படுகின்றதா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

ஆம், பாதீட்டிலும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

தற்போது கூட ஒரு தொகை ஆயர்வேத மருந்துகள் காலாவதியாகியுள்ளன, என்று கூறப்பட்டது. ஒரு தொகை பயனாளிகளுக்கான மருந்துகள் காலாவதியாக போகின்றது, ஒரு தொகை பயனாளிகளுக்கான மருந்துகள் காலாவதியாக போகின்றது. ஏற்கனவே இவ்வாறு மருந்துகள் காலாவதியாகப்போகின்றது என்று கூறும் போது கொட்டகலை, அம்பகமுவ வைத்தியசாலைகளுக்கு சபை அனுமதியுடன் மருந்துகள் வழங்கப்பட்டன. கடந்த ஒரு 02 வருடத்திற்கு முன்பு இவ்வாறான சூல்நிலை ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் நடமாடும் சேவையினூடாக இம்மருந்துகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. சபைக்கு கீழுள்ள வைத்தியசாலையை விஸ்தரிக்க வேண்டும் என்று தான் நான் கேட்கின்றேன். வேண்டுமானால் இக்கடித்தை மத்திய மாகாணத்தின் ஆயர்வேத திணைக்களத்திற்கு அனுப்பி அவர்களினூடாக கூட இவ்வேலைத்திட்டத்தை செய்யலாம். கட்சி பார்த்தோ மத, இனம் பார்த்து இவ்விடயத்தை செய்யவில்லை. இவ்விடயம் நடைமுறைப்படத்தப்பட்டால் அனைவரும் தான் பயனடைவர்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

நான் ஆயுர்வேத நடமாடும் சேவை தொடர்பாக பிரேரணை முன்வைத்துள்ளேன், ஆனால் கௌரவ உறுப்பினரின் பிரேரணை ஆயர்வேத உப வைத்திய நிலையங்களை நிறுவுவதாகும், எனவே இதற்கமைவாக கட்டிடம் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கவும்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

சாமிமலையில் வாசிகசாலையிலும், நல்லதண்ணியில் எமது உபகாரியாலயத்திலும் ஒரு இடத்தை ஒதுக்கலாம், லக்கமில் ஒரு இடத்தை கேட்டு பெறலாம்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

தோட்ட மருந்தகங்களில் கூட நாம் இடமொன்றை கேட்டுப்பெறலாம்.

**தீர்மான இல 21**

முதலாவதாக நடமாடும் வைத்தியசாலைகளை குறித்த 04 பிரதேசங்களில் (சாமிமலை, லக்கம், நல்லதண்ணி, காட்மோர்) ஆகிய இடங்களில் நடைமுறைப்படுத்தவும், அதேவேளை அவ்விடங்களில் நிரந்தர ஆயர்வேத வைத்திய உப வைத்தியசாலைகளை நிர்மானிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

எனது 02வது பிரேரணை மஸ்கெலியா ஆயர்வேத வைத்தியசாலையினை வசதியுடனான கட்டிடத்திற்கு மாற்றுதல் அல்லது புதிய கட்டிடம் ஒன்றை அமைத்தல். அங்கு வரும் நோயாளர்களுக்கான இட வசதி, மலசலகூட வசதிகள் போன்றவை இல்லை. வைத்தியர்களுக்கான மலசலகூடம் மாத்திரமே உள்ளது,

இதனால் இங்கு வரும் நோயாளர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர், இதற்கான தீர்மானமொன்றை பெற்றுதருமாறு சபையை கேட்டுக்கொள்கின்றேன்.

**தீர்மான இல 22**

இவ்விடயம் தொடர்பாக சுகாதார அமைச்சுக்கு கடிதமனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

அடுத்த பிரேரணையானது, தேசிய நீர் வழங்கல் அதிகார சபையிலே வழங்கப்படுகின்ற முழு விண்ணப்பப்படிவமும் தனி சிங்கள மொழியிலே காணப்படுகின்றது, இதன் காரணமான அநேகமானோருக்கு மொழி பிரச்சினை ஏற்படுகின்றது. எனவே அதிகப்படியான தமிழ் பேசும் மக்கம் இப்பிரதேசத்திலே இருப்பதனால் இவ்விண்ணப்பப்படிவங்கள் மற்றும் ஒப்பந்தங்கள் தமிழ் மொழியும் காணப்பட வேண்டுமென குறிப்பிட்டு தேசிய நீர் வழங்கல் அதிகார சபையிடம் கேட்டுக்கொள்ள வேண்டும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்களின் பிரேரணையினை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

நான் மொத்தமாக 05 பிரேரணைகளை முன்வைத்திருந்தேன், அதிலே 03 பிரேரணைகள மாத்திரமே நிகழ்ச்சி நிரலில் இணைக்கப்பட்டுள்ளது, ஏனைய 02 பிரேரணைகள் உள்ளடக்கப்படவில்லை என கடிதம் அனுப்பப்பட்டுள்ளது, இதிலொரு வேடிக்கையானவொரு விடயம் என்னவென்றால், கௌரவ உறுப்பினர் ஆனந்த அவர்கள் ஆயர்வேத வைத்தியசாலை கட்டிடம் ஒன்றை வேண்டி பிரேரணை முன்வைத்தார், அதனை தீர்மானமாக நிறைவேற்றி கட்டித்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவுள்ளோம், இந்த மஸ்கெலியா வைத்தியசாலையில் வயதான முதியவர்கள் இரத்த பரிசோதனை அறிக்கையினை பெற மிகவும் கஸ்டப்படுகின்றனர், ஒன்று கிளங்கன் வைத்திசாலைக்கு சென்று தான் பரிசோதனை செய்ய வேண்டும், இல்லா விட்டால் தனியார் துறைக்கு சென்று பெறவேண்டியுள்ளது, அது சம்பந்தமாக மருத்துவ ஆய்வுகூட தொழிநுட்பவியலாளர் ஒருவரை கேட்டு நான் பிரேரணை முன்வைத்திருந்தேன், ஆனால் அப்பிரேரணைக்கு அனுமதி கொடுக்கவில்லை. அது தொடர்பாக செயலாளரிடம் கேட்ட போது பிரதேச மக்கள் கையொப்பமிட்ட கடிதம் ஒன்றை தாருங்கள், அவ்வாறு கொண்டு வந்தால் கடிதமொன்றை அனுப்பலாமென பதில் கூறியிருந்தார். மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்து மக்கள் பிரச்சினையை பேசுவதற்காக தான் நாங்கள் மக்கள் பிரதிநிதிகளாக இங்கு வந்துள்ளோம். கடிதம் பெற்று வந்து தான் பேச வேண்டும் என்றால் நாங்கள் தேவையில்லையே?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

மக்களிடம் கடிதம் பெற்றுவர சொல்லி அவர் கூறவில்லை, தாங்களை தான் அவர் கடிதம் தருமாறு கூறியிருந்தார்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ தவிசாளர் அவர்களே, இதுவரை உறுப்பினர் யாராவது கடிதம் எழுதி தான் பேசியுள்ளோமா? வைத்தியசாலை தொடர்பக தானே முன்வைத்தேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

ஆயர்வேத வைத்தியசாலை எமது சபை நிர்வாகத்திற்குட்பட்டது. பொது வைத்தியசாலை எமது நிர்வாகத்தின் கீழ் இல்லை.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கடந்த காலங்களிலும் வைத்தியசாலை தொடர்பாக பல்வேறு விடயங்கள் பேசப்பட்டு அது தொடர்பாக சுகாதார அமைச்சுக்கு கடிதமனுப்பி அதில் வெற்றியும் கண்டுள்ளோம் தானே? தற்போது இரத்தம் பரிசோதிக்கும் நிலையமொன்று உள்ளது. அதற்கான ஆய்வுகூட தொழிநுட்பவியலாளர் ஒருவர் வேண்டும் என்பது தான் எனது வேண்டுகோள்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அண்மையில் ஆய்வுகூட தொழிநுட்பவியலாளர் ஒருவர் மஸ்கெலியா வைத்தியசாலைக்கு நியமனம் பெற்று வரவுள்ளார்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இவ்விடயம் தொடர்பாக மக்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகின்றனர். அடுத்த விடயமானது அபிவிருத்தி, கிராம உத்தியோகத்தர்களுக்கு உரிய கட்டிடங்கள் இல்லை. அனைத்து உத்தியோகத்தர்களும் ஒரே இடத்தில் சந்திப்பதற்கான வேலையை நல்லாட்சி அரசாங்கத்தில் நினசல என்ற வேலைத்திட்டமொன்று செய்யப்பட்டுள்ளது. மஸ்கெலியாவிலும் வந்திருந்தது. இங்கு சமுர்த்தி, கிராம உத்தியோகத்தர்கள் அனைவரும் தற்காலின இடங்களில் தான் உள்ளனர். அனைத்து வட்டாரங்களிலும் இந்த பிரச்சினை உள்ளது. அந்தந்த இடங்களில் 10பேர்ச் காணி கிடைத்தால் அந்தந்த உத்தியோகத்தர்கள் அனைவரும் ஒரே இடத்தில் இருப்பார்கள், அது மக்களுக்கு சேவையை பெற்றுக்கொள்ளவும் இலகுவாக இருக்கும் இது தான் என்னுடைய பிரேரணை, இப்பிரேரணையினை நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படவில்லை என்று கூறினீர்கள் மன கவலையாக உள்ளது. அடுத்ததாக பிரேரணைக்கு வருகின்றேன். மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட மக்களுக்கு நடமாடும் சேவை ஒன்றை பெற்றுக்கொடுக்க வேண்டும். பிறப்பு சான்றிதழ்களை பெற கூட சிலர் மிகவும் சிரமப்படுகின்றனர், அத்துடன் தேசிய அடையாள அட்டைகளையும் பெற்றக்கொள்ள வேண்டியுள்ளது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்த மாதம் 12ம் திகதி சீத்தகங்குலவிற்கும் 06ம் மாதமளவில் இங்கும் நடமாடும் சேவைகளை ஏற்பாடு செய்துள்ளனர்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

மூன்று மூன்று பிரதேசங்களை சேர்த்து தான் செய்யப்போகின்றார்களாம். ஒவ்வொரு வட்டாரட அடிப்படையில் செய்தால் இலகுவாக இருக்கும் இதன் காரணமாக இவ்விடயத்தையும் இணைத்துக்கொள்ளவும். மாவட்ட செயலாளருக்கு வட்டார ரீதியாக ஒரு நடமாடும் சேவையினை ஏற்பாடு செய்யுமாறு வேண்டுகோள் ஒன்றை முன்வைக்கவும், கிட்டதட்ட 08 மாதமாக கூட இறப்புசான்றிதழ்களை பெற முடியாமல் உள்ளனர்.

**கௌரவ உறுப்பினர் T.வசந்தகுமார் அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் பி.ராஜ்குமார் அவர்கள் கட்டிடம் தொடர்பான பிரேரணை ஒன்றை முன்வைத்திருந்தார், நான் கிட்டதட்ட 04 வருடங்களாக தோட்டத்திற்கு சம்பந்தப்பட்ட கட்டிடமொன்றை சமுர்த்தி உத்தியோகத்தருக்கு பெற்றுக்கொடுத்திருந்தேன். அக்கட்டிடத்திற்கு கீழ் தகரம் மாற்றுவதற்கு ஏற்பாடு செய்திருந்தனர், ஏனைய இடங்களுக்கு எல்லாம் மாற்றி விட்டு அங்கிருந்த கள உத்தியோகத்தர் ஒருவர் இது சமுர்த்தி அலுவலகருடன் தொடர்புப்பட்ட கட்டிடம் எனவே அவர்களிடம் 5000.00ரூபா கேளுங்கள் என்று கூறியுள்ளார். உடனே இவ்விடயம் எனக்கு கிடைக்கப்பெற்றதும் தோட்ட நிர்வாகத்துடன் பேசி உடனே தகரத்தை மாற்றிக்கொடுத்தேன், தகரத்தை மாற்றிய பின்னர், குறித்த கள உத்தியோகத்தர் அறையின் சாவி சமுர்த்தி உத்தியோகத்தரிடம் இருப்பதனால் ஆணி வைத்து அடித்து விட்டார், சமுர்த்தி உத்தியோத்தரின் ஆவணங்கள் அனைத்தும் அந்த அறையில் தான் உள்ளது. எனவே தவிசளார் மூலமாக இவ்விடயத்திற்கு கடிதமொன்றை அனுப்பவும்.

**கௌரவ உறுப்பினர் K.நித்தியானந்தன் அவர்கள் (இ.தொ.கா)**

தற்போது 05ம் ஆண்டு புலமைபரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதுடன், எனது வட்டாரத்திற்கும் கௌரவ உறுப்பினர் எஸ்.சுரேஸ்குமார் அவர்களின் வட்டாரத்திற்கும் 05ம் மாதம் 12ம் திகதி இந்த நடமாடும் சேவை நடைபெறவிருந்தது. எனினும் யாத்திரிகளின் வருகை காரணமாக அதனை 06ம் மாதம் 12ம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது. மேலும் காணி உரிமை வழங்கும் நடமாடும் சேவை அடுத்த மாதம் 12ம் திகதி நடைபெறவுள்ளது. எங்களுடைய கிராம உத்தியோகத்தர் இதனை பிரதேச செயலாளரிடம் வேண்டுகோள் முன்வைத்து இவ்விடயம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

**கௌரவ உறுப்பினர் K.யோகேந்திரன் அவர்கள் (ஐ.ம.சு.மு)**

கௌரவ உறுப்பினர் பி.ராஜ்குமார் அவர்கள் கொண்டு வந்த பிரேரணைக்கு வலுசேர்க்கும் முகமாக, எனது வட்டாரத்திலும் கூட நிறைய பேர் இறப்பு சான்றிதழ்களை பெறமுடியாமல் உள்ளனர். எடுக்க முடியாத மரண சான்றிதழ்களில் சிலவற்றை தோட்ட வைத்திய அதிகாரியினுடைய சிபாரிசு கடிதத்துடன் நீதிமன்றம் மூலம் பெற்றுக்கொடுத்திருந்தோம். மேலும் மருத்துவ ஆய்வு கூட தொழிநுட்ப தொழிநுட்பவியலாளர் ஒருவரை

பெற்றுக்கொடுப்பது தொடர்பான பிரேரணை ஒன்றை கௌரவ உறுப்பினர் மனவருத்தத்துடன் தெரிவித்திருந்தார், கூடிய விரைவில் E4D நிறுவனத்தின் பணிப்பாளரினூடாக தலவாக்கலையில் இருந்து மருத்துவ ஆய்வுகூட தொழிநுட்பவியலாளர் ஒருவர் மஸ்கெலியா வைத்தியசாலைக்கு வரவுள்ளார். E4D நிறுவனம் இவ்விடயத்தினை செய்து தர முன்வந்துள்ளது.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

நடமாடும் சேவை என்பது ஜீன் மாதம் அனைத்து பிரதேசங்களிலும் செய்வதற்கு பிரதேச செயலகம் தீர்மானித்துள்ளது, மவுசாக்கலை வட்டாரத்தில் நடமாடும் சேவைக்கான ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கைகளை செய்யவுள்ளோம். அதற்கான தினமொன்றை தீர்மானித்து தேவையான ஆவணங்களை தயாரிக்கும் வேலைகளை ஆரம்பிக்கவுள்ளோம். திடீர் மரண பரிசோதகர் ஒருவர் இல்லாததனால் இறப்பு சான்றிதழை பெற்றுக்கொள்வதில் சிக்கல் நிலை ஏற்படுகின்றது. கூடிய விரையில் எமது பிரதேசத்திற்கு திடீர் மரண பரிசோதகர் ஒருவரை கொண்டு வந்தால் இந்த இறப்பு சான்றிதழ் விடயத்திற்கு நாம் தீர்வினை காணலாம்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

**கௌரவ உறுப்பினர் K.G.K.பெரேரா அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ தவிசாளர் அவர்களே, சிவனொளிபாதமலை யாத்திரைக்காக வருகின்ற மக்களின் நலன் கருதி, மஸ்கெலியா எரிபொருள் நிரப்பும் நிலையத்தினை இரவு பகல் சேவை நிலையமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுங்கள் என கேட்டுக்கொள்கின்றேன். இரவு 10 மணிக்கு முன்பு வருகின்ற யாத்திரிகளின் தேவைகேற்ப எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு எரிபொருள் நிலையமொன்று மஸ்கெலியா நகரத்தில் இல்லாதிருப்பதனால் அவர்களுக்கு ஏற்படுகின்ற அசௌகரியத்தினை போக்குவதற்காக எரிபொருள் வழங்குவதனை இரவு பகல் சேவையாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுங்கள்.

**தீர்மான இல 23**

அந்தந்த வட்டாரங்களில் தனித்தனியான நடமாடும் சேவைகளை பெற்றுத்தர வேண்டி பிரதேச, மாவட்ட செயலாளருக்கு கடிதமனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

மஸ்கெலியா பிரதேசங்களில் தற்போது ஒரே குடும்பத்தில் பல உப குடும்பங்கள் உள்ளன, அவற்றை வாக்காளர் பட்டியலில் தனிக்குடும்பமாக இணைத்துக்கொள்ள வேண்டும். தற்போது வீடு வீடாக சென்று வாக்காளர் பட்டியல் தயாரித்துக் கொண்டிருக்கின்றனர். கடந்த முறை 5000.00 கொடுப்பனவு வழங்கும் போது இதால் பல சிக்கல் நிலைகள் ஏற்பட்டிருந்தன. அண்மையில் நான் ஒரு வீட்டிற்கு சென்றிருந்தேன் ஒரு வீட்டில் 04 குடும்பங்கள் உள்ளன. வாக்காளர் பட்டியல் நிரப்பும் போது ஒரு வாசல்படி உள்ள வீட்டிற்கு ஒரு வாக்களார் பட்டியல் என்று தான் உள்ளது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

தற்போது உப குடும்பங்கள் இருந்தால் தனிதனியாக விண்ணப்பப்படிவமொன்று வழங்குகின்றனரே?**கௌரவ**

**உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இல்லை, எனது வட்டாரத்தில் அவ்வாறு இல்லை, வீடு வழங்கும் வேலைத்திட்டம் ஒன்று செய்யும் போது இவ்வாறு ஒரு வீட்டில் உள்ள 04 குடும்பங்களுக்கு அவ்வீடு வழங்கப்படுமா? அல்லது தற்காலிக கூடாரங்களில் வசிப்பவர்களுக்கு வழங்கப்படுமா? இவ்வாறான விடயங்களில் சிக்கல் நிலை ஏற்படும். எனவே இவ்வாறான உப குடும்பங்களை பிரித்து தனித்தனி குடும்பமாக வாக்காளர் பட்டியலில் பிரதேச செயலாளருக்கு கடிதமனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

எனது வட்டாரத்திலும் கௌரவ உறுப்பினர் நித்தியானந்தன் அவர்களின் வட்டாரத்திலும் இவ்வாறான பிரச்சினை காணப்பட்டது. தற்போது வந்துள்ள கிராம உத்தியோகத்தர் இவ்வேலையை சரியாக செய்கின்றனர். நாங்கள் தான் இதற்கு தூரத்தை இருந்து உதவி செய்கின்றோம். 03 விடயங்களின் அடிப்படையில் 03 விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்பட்டுள்ளது. அதில் சில பிரச்சினைகளும் ஏற்பட்டது. மக்களை தெளிவுப்படுத்தினால் இலகுவாக இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் A.ரவீந்திரராஜா அவர்கள் (ஐ.தே.க)**

இந்த வாக்காளர் பட்டியல் தெரிவு செய்வதில் எமது வட்டாரத்தில் பாரிய சிக்கல் நிலவுகின்றது. எங்களுடைய வட்டாரத்தில் உள்ள கிராம உத்தியோகத்தர் கூறுகின்றார், இம்முறை விண்ணப்பப்படிவம் வழங்கப்பட மாட்டாது. ஏற்கனவே உள்ள அடிக்கடையையும் தேசிய அடையாள அட்மை பிரதியினையம் கொண்டு வந்தால் நாங்கள் நிகழ்நிலையில் பதிவு செய்வோம், இத்தகவலை அனைவருக்கும் கூறுங்கள் என்று கூறியுள்ளார். 5000.00 வழங்கும் போது நிறைய குடும்பங்களுக்கு இவ்வாறான பிரச்சினை ஏற்பட்டது. எனவே இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

இது தேர்த்தல் சம்பந்தமான விடயம் என்றால் தேர்தல் ஆணையாளருக்கு கடிதமனுப்ப வேண்டும். மவுசாக்கலை வட்டாரத்தில் புதிதாக 600, 700குடும்பங்கள் புதிதாக பதியப்பட்டுள்ளது. அந்தந்த கிராம சேவகரை பொருத்து விடயம் நடைபெற்றுள்ளது.

**தீர்மான இல 24**

மேற்குறித்த பிரேரணை தொடர்பாக தேர்தல் ஆணையாளர் மாவட்ட, பிரதேச செயலாளருக்கு கடிதமனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

அடுத்ததாக ஆயர்வேத நடமாடும் சேவை தொர்பான பிரேரணையாகும், மருந்துகள் பழுதடைந்துள்ளது என்றால் அது எங்களின் பிழை அல்ல. அது வைத்தியர்களின் பிழை, மருந்துகள் பழுதடையும் முன்னர் செயலாளருக்கு விடயத்தை தெரிவித்திருந்தால் அதற்கான மாற்று வழிக்கு சென்றிருக்கலாம். இனிவரும் காலங்களில் இவ்வாறான விடயங்கள் நடைபெறாமல் இருக்க நடவடிக்கை எடுக்கவும். எனவே வார இறுதி நாட்களில் நடமாடும் சேவைகளை வட்டார ரீதியில் ஏற்பாடு செய்வோம். வயதானவர்களுக்கு நகரத்திற்கு வரவும் சிரமம் தானே இவ்வாறு நடமாடும் சேவைகளை செய்யும் பட்சத்தில் நன்மையாக அமையும்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ உறுப்பினர் கே.ஜி.கே.பெரேரா அவர்கள் கொண்டு வந்த பிரேரணை உண்மையில் முக்கியமான விடயமொன்று இவ்விடயம் தொடர்பாக நாம் பல்நோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு கடிதமொன்றை அனுப்ப வேண்டும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இச்சபையினை அமைதியாக நடாத்திச் செல்ல ஒத்துழைப்பு வழங்கியமைக்கு நன்றி. இத்துடன் இச்சபை இனிதே நிறைவுறுகின்றது.

நன்றி வணக்கம்.

**G.செண்பகவள்ளி,**
**கௌரவ தவிசாளர் அவர்கள்,**
**மஸ்கெலியா பிரதேச சபை,**
**மஸ்கெலியா.**

**S..ராஜவீரன்,**
**செயலாளர்,**
**மஸ்கெலியா பிரதேச சபை,**
**மஸ்கெலியா.**